# 01-07-2024 செய்தி

## ஜிஎஸ்டி கவுன்சிலின் முக்கியமான 3 பரிந்துரைகள்

- ஒருவர் 2017-18 முதல் 2019-20 வரையில் தாக்கல் செய்த ஜிஎஸ்டி ரிட்டர்னில் ஏதேனும் பிழைகள் இருந்து அதற்கு ஜிஎஸ்டி அதிகாரி அபராதமும் வட்டியும், விதித்திருந்தால்,
- புதிய பரிந்துரையின்படி, அதை அவர் செலுத்தத் தேவையில்லை. விடுபட்டிருந்த ஜிஎஸ்டியை மட்டுமே செலுத்தினால் போதும்.
- முந்தைய நடைமுறைப்படி, ஒருவர் தாக்கல் செய்த ஜிஎஸ்டி ரிட்டர்னை அதிகாரிகள் சோதனை செய்யும்போது அதில் ஏதேனும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டால், அதற்கு அபராதம் விதிக்கப்படும். தவிர, விடுபட்ட ஜிஎஸ்டியை வட்டியுடன் கட்ட வேண்டும்.
- இதில் என்ன பிரச்சினை என்றால், ஜிஎஸ்டி ரிட்டர்ன் தாக்கல் செய்யும்போது, நடைமுறைச் சிக்கல்களால் சில ஜிஎஸ்டிகளுக்கு முறையான சான்றுகள் இல்லாமல் போவதுண்டு.
- உதாரணத்துக்கு, நீங்கள் ஒருவரிடம் சரக்குகளை வாங்குகிறீர்கள். அதற்கான ஜிஎஸ்டி ரிட்டர்னை நீங்கள் தாக்கல் செய்துவிடுவீர்கள்.
- ஆனால், அந்த விற்பனையாளர் உங்களுக்கு வழங்கிய ஜிஎஸ்டிக்காக முறையாக ரிட்டர்ன் தாக்கல் செய்திருக்க மாட்டார். இத்தகைய சூழலில், அவர் மூலம் உங்களுக்கு வர வேண்டிய இன்புட் கிரெடிட் டேக்ஸ் உங்களுக்கு மறுக்கப்படலாம்.
- தவிர, இதற்கு அபதாரமும் விதிக்கப்படும். மேலும், விடுபட்ட ஜிஎஸ்டியை 18 சதவீத வட்டியுடன் கட்ட வேண்டும்.
- இந்த நடைமுறைச் சிக்கலால், பல வணிகர்கள் பாதிப்பை எதிர் கொண்டனர். இந்நிலையில், 2017-18 முதல் 2019-20 ஆண்டு வரையில், ஜிஎஸ்டி ரிட்டர்ன் தாக்கலில் நிகழ்ந்த பிழைகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தையும் வட்டியையும் ரத்து செய்ய ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரை செய்துள்ளது.
- அதேசமயம், இந்தப் பரிந்துரை பிரிவு 73-க்கு மட்டுமே பொருந்தும். அதாவது, ஜிஎஸ்டி ரிட்டர்ன் தாக்கலில் பிழைகள் இருந்தால், அதிகாரிகள் இரண்டு பிரிவுகளில் நோட்டீஸ் அனுப்புவார்கள்.
- உள்நோக்கம் ஏதும் இல்லாமல் தவறுதலாக ஜிஎஸ்டி ரிட்டர்ன் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், பிரிவு 73 நோட்டீஸ் அனுப்பப்படும்.
- அதுவே, ஒருவர் வேண்டுமென்றே பொய்யான ஜிஎஸ்டி ரிட்டர்ன் தாக்கல் செய்திருக்கிறார் என்று அதிகாரிகள் முடிவு செய்தால் பிரிவு 74-ன் கீழ் நோட்டீஸ் அனுப்பப்படும்.
- இந்நிலையில் தற்போதைய பரிந்துரை பிரிவு 73-க்கு மட்டுமே பொருந்தும் என்றும் பிரிவு 74- கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தால் அவர்கள் அபராதத்தையும் வட்டியையும் சேர்த்தே கட்ட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- வணிகர்கள் ஒவ்வொரு மாதமும் ஜிஎஸ்டி ரிட்டர்ன் தாக்கல் செய்ய வேண்டும். ஒவ்வொரு நிதி ஆண்டுக்கான ஜிஎஸ்டி விவரங்களை மறு ஆண்டின் செப்டம்பருக்குள் தாக்கல் செய்துவிட வேண்டும்.
- அதாவது, 2017-18 நிதி ஆண்டுக்கான ஜிஎஸ்டி ரிட்டர்னை 2018 செப்டம்பருக்குள் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், இன்புட் கிரெடிட் டேக்ஸ் மறுக்கப்படும்.
- இதனிடையே 2020-21 நிதி ஆண்டில் இந்தக் கால அவகாசம் செப்டம்பரிலிருந்து நவம்பருக்கு மாற்றப்பட்டது.
- அந்த ஒரு நிதி ஆண்டுக்கு மட்டும் இவ்வாறு கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டது. அதேசமயம், 2017-18, 2018-19, 2019-20 ஆகிய மூன்று நிதி ஆண்டுகளில், அந்தந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்துக்குள் ரிட்டர்ன் தாக்கல் செய்ய தவறியவர்களுக்கு 'இன்புட் கிரெடிட் டேக்ஸ்' மறுக்கப்பட்டது.
- இந்நிலையில், தற்போது இவர்களுக்கும் ஜிஎஸ்டி ரிட்டர்னுக்கான கால அவகாசம் 2021 நவம்பர் வரையில் நீட்டிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ஜிஎஸ்டி ரிட்டர்னை வணிகர் தொடர்ந்து தாக்கல் செய்யாமல் இருந்தால், அவரது ஜிஎஸ்டி எண்ணை அதிகாரிகள் முடக்கக் கூடும்.
- மீண்டும் ஜிஎஸ்டி அதிகாரிகள் அவரால் மாதாந்திர ஜிஎஸ்டி ரிட்டர்னை தாக்கல் செய்ய முடியாது. இதனால், அவரால் இன்புட் கிரெடிட் டேக்ஸையும் பெற முடியாது.
- தற்போது இதற்கு சாதகமான பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, முடக்கப்பட்ட ஜிஎஸ்டி எண்ணை அதிகாரிகள், மீண்டும் செயல்பாட்டுக்கு அனுமதிக்க நாளிலிருந்து 30 நாட்களுக்குள், விடுபட்டுப்போன ஜிஎஸ்டி ரிட்டர்னை தாக்கல் செய்து இன்புட் கிரெடிட் டேக்ஸைப் பெற்றுக்கொள்ளலாம்.

## புதிய குற்றவியல் சட்டங்களின் சிறப்பம்சங்கள்

**அறிமுகம்**

- ஆங்கிலேயர் காலச் சட்டங்களின் அடிப்படையைக் கொண்டு நீதியை எட்டுவதற்கான சாமானிய மக்களின் பாதையில் எளிமையைப் புகுத்தும் நோக்கில் பாரதிய நியாய சன்ஹிதா (பிஎன்எஸ்) பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (பிஎன்எஸ்எஸ்), பாரதிய சாட்சிய அதினியம் ஆகிய மூன்று புதிய சட்டங்களில் பல்வேறு புதுமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**மின்னணு முறை**

- காவல் துறையிடம் இணைய வழியாக புகார்களை பதிவு செய்தல், மின்னணு முறையில் சம்மன் அனுப்புதல், தீவிர குற்றச் சம்பவங்களில் நிகழ்விட ஆதாரங்கள் சேகரிப்பை கட்டாயம் விடியோ பதிவு செய்வது ஆகியவை புதிய குற்றவியல் சட்டங்களின் முக்கிய சிறப்பம்சங்கள் ஆகும்.

**FIR**

- புதிய சட்டங்களின் கீழ், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது புகார்தாரர்கள் முதல் தகவல் அறிக்கையின் (எஃப்ஐ.ஆர்) இலவச நகலைப் பெறுவர்.
- இது சட்ட நடவடிக்கையில் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்யும். அதேபோல ஏதேனும் வழக்கில் ஒரு நபர் கைது செய்யப்பட்டாமல், அவர் தனது நிலைமை பற்றி தனக்கு நெருங்கியவர்களுக்கு தகவல் தெரிவிக்க உரிமை உண்டு. இது அவருக்கான உடனடி ஆதரவையும் உதவியையும் உறுதி செய்யும்.

**நகல்**

- கைது விவரங்கள் காவல் நிலையங்கள் மற்றும் மாவட்டத் தலைமையகங்களுக்கு எளிதில் கிடைக்கும். அதே போல, குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் 14 நாட்களுக்குள் எப்ஐஆர், காவல் அறிக்கை, குற்றப்பத்திரிகை, வாக்குமூலங்கள் மற்றும் பிற ஆவணங்களின் நகல்களைப் பெற உரிமை உண்டு.

**தடயவியல் நிபுணர்கள்**

- கொடூரமான குற்றங்கள் தொடர்பான வழக்கையும் அதன் விசாரணையையும் வலுப்படுத்த, தடயவியல் நிபுணர்கள் குற்றம் நடந்த இடங்களுக்குச் சென்று சாட்சியங்களைச் சேகரிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**பெண்களும் குழந்தைகளும்**

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முன்னுரிமை அளித்து, முதல் தகவல் அறிக்கை பதிவான இரண்டு மாதங்களுக்குள் விசாரணை முடிக்கப்படுவதை உறுதிசெய்ய புதிய சட்டங்கள் வலியுறுத்துகின்றன.
- வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்த 90 நாள்களுக்குள் தங்கள் வழக்கின் முன்னேற்றம் குறித்த தொடர்ச்சியான அறிவிப்புகளைப் பெற பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து மருத்துவமனைகளிலும் இலவச முதலுதவி அல்லது மருத்துவ சிகிச்சைக்கு புதிய சட்டங்கள் உத்தரவாதம் அளிக்கின்றன.
- பெண்களுக்கு எதிரான சில குற்றங்களுக்காக பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்கு மூலம் பதிவு செய்யப்படும் நடைமுறை முடிந்தவரை ஒரு பெண் மாஜிஸ்திரேட்டால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- நீதிமன்ற அழைப்பாணைகள் இனிமேல் மின்னணு முறையில் வழங்கப்படலாம். வழக்கு விசாரணைகளில் தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்க்கவும் சரியான நேரத்தில் நீதி வழங்கப்படுவதை உறுதிசெய்யவும் அதிகபட்சம் 2 ஒத்திவைப்புகளை மட்டுமே நீதிமன்றங்கள் அனுமதிக்கும்.
- சாட்சிகளின் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் உறுதி செய்வதற்கும் சட்ட நடவடிக்கைகளின் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் சாட்சி பாதுகாப்பு திட்டத்தை அனைத்து மாநில அரசுகளும் செயல்படுத்த புதிய சட்டங்கள் கட்டாயப்படுத்துகின்றன.
- சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில், 'பாலினம்' என்பதன் வரையறை இப்போது மாற்றுப் பாலினத்தவரையும் உள்ளடக்குகிறது.

## வரலாற்று வெற்றி

- 1983-க்குப் பிகு 24 ஆண்டுகளும்இ 2007-க்குப் பிறகு 4 ஆண்டுகளும், இப்போது 13 ஆண்டுகளும் உலகக் கோப்பையை கைப்பற்ற காத்திருக்க வேண்டி வந்தது என்றாலும்கூட ஒவ்வொரு வெற்றியும் இந்தியாவுக்கு வித்தியாசமான ஏற்றம் தரும் வெற்றியும் வித்தியாசமான ஏற்றம் தரும் வெற்றியாகவே அமைந்தன.
- பார்படாஸ் நகரில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் இந்திய டி20 உலகக் கோப்பையை வென்றபோது விளையாடிய வீரர்களும், உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களும் உற்சாக வெள்ளத்தில் மிதந்தனர்.
- இப்போது ஐந்தாவது முறையாக ஐசிசி கோப்பையை இந்தியா வென்றிருக்கிறது. 1983-இல் கபில் தேவ் தலைமையிலும், 2011- இல் தோனி தலைமையிலும் ஒருநாள் உலகக் கோப்பை போட்டிகளிலும், 2007-இல் தோனி தலைமையிலும், இப்போது ரோஹித் தலைமையில் டி20 உலகக் கோப்பை போட்டியிலும், 2013-இல் தோனி, தலைமையிலும் சாம்பியன்ஸ் டிராஃபி போட்டியிலும் இந்தியா வென்றுள்ளது.
- இப்போது, நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் 20 அணிகள் பங்கேற்றன. நமீபியா, நேபாளம், ஸ்காட்லாந்து, அயர்லாந்து, உகாண்டா, ஓமன், பப்புவா நியூ கினியா போன்றவை புதிதாக இடம் பெற்றன.

## புதிய குற்றவியல் சட்டங்களை இன்றுமுதல் அமல்

- நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தப்பட்ட இந்திய தண்டணைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகியவற்றுக்கு, மாற்றாக,
  1. பாரதிய நியாய சம்ஹிதா,
  2. பாரதிய நாகரிக் சுரக்ஷா,
  3. பாரதிய சாக்ஷிய அதினியம் ஆகிய குற்றவியல் சட்ட்ங்களை மத்திய அரசு இயற்றியுள்ளது.

**பூஜ்ஜிய எஃப்ஐஆர்**

- பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்), காவல் துறையிடம் இணையவழியில் புகார்களைப் பதிவு செய்தல், குறுந்தகவல் போன்ற மின்னணு வழிகளில் அழைப்பாணைகள் அனுப்புதல்,
- அனைத்து கொடிய குற்றங்களிலும் குற்றம் நடைபெற்ற இடங்களை கட்டாயம் காணொலி வழியில் பதிவு செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய நவீன நீதி அமைப்பை இந்தப் புதிய சட்டங்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் என்று கூறப்படுகிறது.
- இதில் பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கை மூலம், ஒரு குற்ற நிகழ்வு எங்கு நடைபெற்றதோ, அந்த இடத்தின் காவல் நிலையம் மட்டுமில்லமல், எந்தவொரு காவல் நிலையத்திலும் வழக்குப் பதிவு செய்ய முடியும்.

**45 நாள்களில் தீர்ப்பு**

- புதிய குற்றவியல் சட்டங்களின்படி, குற்ற வழக்குகளில் நீதிமன்ற விசாரணை நிறைவடைந்த நாளில் இருந்து 45 நாள்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- இதேபோல அந்த வழக்குகளில் முதல் நீதிமன்ற விசாரணை நடைபெற்ற நாளில் இருந்து 60 நாள்களுக்குள் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்ய வேண்டும்.
- இந்தச் சட்டங்களின்படி, பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் பெண்களின் வாக்குமூலத்தை அவர்களின் பாதுகாவலர்கள் முன்னிலையில் பெண் காவல் துறை அதிகாரி பெறுவார்.
- அந்தப் பெண்களிடம் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் ஒருவாரத்துக்குள் வழங்கப்பட வேண்டும்.
- மேலும், குழந்தை விற்பனை கொடிய குற்றமாக்கப்பட்டு, 18 வயதுக்குள்பட்ட சிறாரை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்வோருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை விதிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.